www.tamilarangam.net



சமூக சீர்த்திருத்தமில்லாத அரசியல்
சிலரின் சுயநலத்துக்குத்தான் பயன்படுமே தவிர
வேறு ஒன்றுக்கும் பயன்படாது.

**-பெரியார்-**

VADU இதழ் -11,12 மே-ஜூன் 2008

njhlh;GfSf;F:-
**F.D.S.D.S**
70, SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

நன்கொடை-1€
சந்தா வருடம்-15€
(தபாற்செலவு உட்பட)

இலங்கை,இந்திய வாசகர்களுக்கு இலவசம்.

வடிவமைப்பு - விஜி

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நடந்துவரும் ஆயுத வன்முறைப் போராட்டமானது பல வழிகளிலும் பின்தள்ளப்பட்டு ஒரு ஜனநாயக சூழலை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இக்கால கட்டத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட பல அமைப்புக்கள் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் கருத்தரங்குகளையும், கருத்துப்பரிமாறல்களையும் நடத்தி வருகின்றனர். அரசியல் ரீதியான முரண்பாடுகள், அவர்களுக்கான தனித்துவங்கள் எவ்வகையாயிருப்பினும் ஒரே மேசையில் அமர்ந்து சமாதானம், அமைதி போன்ற விடயங்களை விவாதிப்பதென்பது ஒரு ஆரோக்கியமான நிகழ்வாகவே நாம் கருதுகிறோம்.

நடந்து முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நேர்மையானதாகவும், நியாயமாகவும் நடத்தி முடிக்கப்படவேண்டுமென பல மனித உரிமை அமைப்புக்கள் எடுத்த முயற்சியில் நாமும் பங்குகொண்டோம். அந்த வகையில இலங்கை ஜனநாயக ஒன்றியம், இலங்கை இஸ்லாமிய அமைப்பு, தமிழ் சமாதான ஒன்றியம், போன்ற அமைப்புகளுடன் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாமும் இணைந்து ஒரு அறிக்கையினை இலங்கை அரசின் கவனத்துக்கும், கிழக்கு மாகாண மக்களின் கவனத்திற்கும் கொண்டுவந்தோம். தற்போது கிழக்கில் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு ஓர் நிர்வாகச் சூழலுக்கான வாய்ப்புகள் அமைந்திருப்பதையும் நாம் வரவேற்கின்றோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய அமைப்புக்களின் கூட்டு முன்னணியான தமிழ் ஜனநாயக தேசியக் கூட்டணி தங்களது அரசியல் செயற்பாடுகள் குறித்து 04-05-2008 இல் பிரான்சில் ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தனர். ஜனநாயகத்தின் அவசியம், மாற்றுக்கருத்தைப் பேணுதல், ஐக்கியத்தின் இன்றைய தேவை என்பன போன்ற பல விடயங்கள் கருத்துக்களாக பரிமாறப்பட்டன. இக்கருத்தரங்கில் நாமும் கலந்துகொண்டு தலித் சமூகம் மீதான மேம்பாடு குறித்து எமது நிலையினை விளக்கியதோடு, தலித் மக்கள் மீதான தமிழ் ஜனநாயக தேசியக் கூட்டணியினரின் அரசியல் தீர்வு பற்றியும் கேள்வி எழுப்பியிருந்தோம். தலித்துக்களினது மேம்பாடு குறித்து விசேடமாக தாம் ஆய்வு செய்வதாகவும், விரைவில் அதுபற்றிய தீர்வு உருவாக்கப்பட்டு வெளியிடுவதாகவும் உறுதி கூறினார்.

18-05-2008 இல் சுவிஸ் நாட்டு நகரான சூரிச்சில் மனிதவள அபிவிருத்தி ஆய்வு நிறுவனம் ஓர் கருத்துப் பரிமாற்றலை நிகழ்த்தியிருந்தது. இந்நிகழ்வில் எமது தலித் சமூக பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்ட பல தமிழ் அமைப்புக்களும் அக்கருத்தரங்கில் பங்குபற்றினர். அங்கும் வட-கிழக்கின் இன்றைய அரசியல் போக்கு, கிழக்கு மாகாணசபை நிர்வாகம், மனிதஉரிமைகள் போன்ற பல விடயங்கள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. நாமும் அக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தலித் சமூகத்தினது அரசியல் உத்தரவாதம், அதன் அவசியம் பற்றிய நியாயங்களையும் எடுத்துரைத்தோம். இந்நிகழ்வில் கலந்துகொண்ட பலரும் எமது இக்கருத்தினை உன்னிப்பாக கவனித்ததோடு அதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டு எமது செயற்பாடுகளுக்கு ஊக்கமும் வாழ்த்தும் தெரிவித்தனர்.
புகலிடங்களில் இது போன்ற ஜனநாயகக் கலந்துரையாடல்களில் நாம் தொடர்ந்து பங்கு கொண்டு தலித் சமூகம் மீதான அரசியல் சமூக உத்தரவாதங்களுக்கான நியாயங்களை தொடர்ந்தும் வலியுறுத்துவோம். (ஆ-ர்)

www.tamilarangam.net

# நினைவுக்குறிப்புகள்-06

-தோழர் யோகரெட்ணம்-



## தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்களே தலித் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தா என்று கூறலாம். தலித் மக்களின் தலைவராகவும், மார்க்ஸிய சித்தாந்தத்தில் இறக்கும் வரை நம்பிக்கை பூண்டவராகவும் செயல்பட்டவர் எம்.சி.அவர்கள். கல்விமான்களான கன்டி பேரின்பநாயகம், ஓரேற்றர் சுப்பிரமணியம் போன்ற இடதுசாரி ஆதரவாளர்களால் வட இலங்கையின் தீண்டாமைக்கும் அதன் கொடுமைகளுக்கும் எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. அக்காலத்திலேதான் இந்தியாவிலிருந்து அண்ணல் காந்தி அவர்களை வட இலங்கைக்கு அழைத்து (1927) கிராமம் கிராமமாக அவர்களையும் கூட்டிச்சென்று தீண்டாமைக்கெதிரான பிரசாரங்களை அன்று மேற்கொண்டனர். காந்தியின் வருகையை நினைவுபடுத்தும் பொருட்டு சுண்ணாகம் பஸ்நிலையத்தில் அரசமரம் ஒன்று நாட்டப்பட்டது. அவ்வரசமரம் இன்றும் பெரிய விருட்சமாக சுண்ணாகம் பஸ்நிலையத்தில் நிற்பதை காணலாம். காந்தியடிகள் சகல கிராமங்களுக்கும் கால் நடையாகவே பயணம் செய்தாராம்.

இதன்பின் எம்.சி. அவர்கள் தனது அரச உத்தியோகத்தை கைவிடும் நிலைக்குள்ளானார். இருப்பினும் தலித் சமூக மேம்பாட்டில் தீவிரமாக செயல்படத் தொடங்கினார். இக்காலகட்டத்திலேதான் எம்.சி.அவர்களுக்கு கம்யூனிஸ்ட் கார்த்திகேயனின் தொடர்பும் ஏற்பட்டது. அதன் மூலம் எம்.சி. அவர்கள் மேலும் தன் பணியை தொடரலானர். தலித்துக்களின் விடுதலைக்கு கல்வியும், பொருளாதாரமுமே மிக அவசியம் என உணர்ந்து செயல்பட்டார். எம்.சி. அவர்கள் தலித் மக்களை ஐக்கியப்படுத்துவதிலும் பெரும் பாடுபட்டார். அதன் நிமித்தமாகவே அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை தோற்றம்பெற்றது. இதில் குடா நாட்டின் கணிசமான பகுதிகளில் வாழும் தலித்துக்கள் அங்கம் வகித்தனர். வில்லூன்றி மயானத்தில் தியாகி முதலி சின்னத்தம்பியின் மரணத்தின் பின்னர் மிகவும் உறுதியான ஸ்தாபனமாகவும் யாழ் மேலாதிக்க சக்திக்கு சவாலான அமைப்பாகவும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை விளங்கியது. பருத்தித்துறையில் பொன்.கந்தையாவின் வெற்றிக்கும் இந்த மகாசபையின் காத்திரமான ஒத்துழைப்பும், அயராத பிரசாரமுமே ஒரு காரணம் என்பர். எம்.சி.யின் எண்ணங்களை செயல் வடிவம் பெறத்தூண்டிய செயலுக்கு முதன்மைக் காரணியாக அமைந்தது தலித் சமூகம் பெற்ற கல்விவாய்ப்பென்றே கூறலாம். 15 க்கு மேற்பட்ட பாடசாலைகளையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரிய ஆசிரியைகளையும் உருவாக்கி தலித் சமூகத்தவர்களிடம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். காணியற்றவர்களுக்கு காணி-நிலம் பெறவும், பின்னர் பலநூறு பேர்க்கு அரச உத்தியோகம் பெறவும் வழிசெய்தார். ஆலயப்பிரவேச போராட்டத்தை நல்லூர் கந்தசாமி கோயிலில் தொடங்கினார். தோழர் எம்.சி. அவர்களின் முயற்சியின் காரணமாகவே முதல் முறையாக தலித் மக்களுக்கு நல்லூர் கந்தசாமி கோயில் ஆலயப்பிரவேசம் சாத்தியமானது.

தோழர் எம்.சி. அவர்கள் கண்களை மூடிக்கொண்டுதான் கதைப்பார். ஏழை, எளிய மக்களின் சமூக பொருளாதார விடுதலையில் மிக அக்கறையுடன் செயல்பட்டார். வெள்ளை வேட்டி, நீளமான நசனல், சால்வையுடனும், காலில் செருப்பும் அணிந்து ஒரு பழைய சயிக்கிளில் யாழ் நகரில் பவனிவரும் எம்.சி, பழகுவதற்கு மிக இனியவர். வேண்டுதல் எதுவானாலும் கண்களை மூடிக்கொண்டுதான் கேட்டுக்கொள்வார். இவரின் இணையில்லா சேவைக்கு உரிய பரிசாக அரசு அவருக்கு நியமன உறுப்பினர் (1970) பதவியைக் கொடுத்தது. இதன் மூலம் தலித் சமூகத்தவர்களின் முதல் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையயையும் பெற்றவர். எம்.சி.யின் சேவையை கௌரவிக்குமுகமாக தலித் சமூகத்தினர் அவருக்கு புதிய மோட்டார் கார் ஒன்றை வாங்கி அன்பளிப்பாகக் கொடுத்தனர். வடபகுதியில் உள்ள சகல கிராமத்தில் வாழும் தலித் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியிலிருந்தே அவருக்கான கார் வாங்கப்பட்டது. அந்த அன்பளிப்பை ஒரு நிகழ்வாக அன்றைய பாதுகாப்பு அமைச்சர் லக்ஸ்மன் ஜயக்கொடி அவர்கள் கலந்து சிறப்பித்து அந்த புதிய மோட்டார்காரை எம்.சி.யிடம் கையளித்தார்.

தோழர் எம்.சி. அவர்கள் வடமராட்சியில் ஒரு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு யாழ் திரும்பும் போது வல்லை வெளியில் அவரின் காருக்கு குண்டு வீசப்பட்டது (1976 அவ்வது 1977). அதில் கார் பலத்த சேதம் அடைந்த போதும் எம்.சி.யோ மற்றும் ஏனையவர்களோ காயங்கள் எதுவுமின்றி தப்பினர். எம்.சி.யின் கார்மீது யாரோ

www.tamilarangam.net

குண்டு வீசியதை அறிந்த தலித் சமூகம் வடமராச்சியிலிருந்து வரும் சகல வாகனங்களையும் யாழ் நகருக்குள் செல்லவிடாது தடுத்துச் சோதனையிட்டனர். அதனால் பல தாக்குதல் சம்பவங்களும் இடம் பெற்றன. அச்சபவம் காரணமாக யாழ் நகரில் பதட்டமான நிலை உருவானது. இதனை அறிந்த எம்.சி. அவர்கள் சமாதான முயற்சியில் செயல்பட்டு நிலமையை சீர்படுத்தினார். இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தை தமிழ் அரசியல் 'தலைமைகள்' எவருமே கண்டிக்கவில்லை. நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் அருளம்பலத்திற்கான இலக்கு (அருளம்பலம் சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து செயல்பட்டதால்) அது தவறுதலாக எம்.சி.யின் கார் மீது வீழ்ந்து விட்டது என்பதாகவே அவர்கள் காரணம் கற்பித்தனர்.

பாராளுமன்றத்தில் எம்.சி. அவர்கள் ஒரு கோரிக்கையை முன்வைத்தார் (1976). வட-கிழக்கில் வாழும் 5 1/2 லட்சம் தலித் மக்களை தனி இனமாக பிரகடனம் செய்யும்படியான கோரிக்கையே அதுவாகும். அவரின் கோரிக்கை சம்பந்தமாக பீதிக்குள்ளான யாழ் மேலாதிக்கவாதிகள் எம்.சி.யை சந்தித்து மேற்படி தீர்மானத்தை வாபஸ் பெறும் படியும், தலித் சமூகம் சார்ந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தமக்கு கால அவகாசம் தரும்படியும் கேட்டதன் காரணத்தால் «தனிஇனமாக்கு» என்ற பிரேரணை வாபஸ் வாங்கப்பட்டது. அன்றைய எம்.சி அவர்களின் கோரிக்கையின் நியாத்தன்மைகள் இன்றும் புறக்கணிக்கமுடியாத ஒன்றாகவே இருக்கிறது.

மிகவும் பலமான ஒரு அமைப்பாக மகாசபை இருந்து செயல்பட்டதை யாழ் மேலாதிக்க தமிழ் அரசியல் கட்சிகளால் பொறுக்கமுடியாது போனது. அதன் நிமித்தமாகவே அவர்கள் மகாசபைக்குள் குழப்பம் விளைவிக்க முனைந்தனர். மகாசபையின் சில உறுப்பினர்களுக்கு பதவி ஆசைகாட்டி சிலரை தமது வலையிலும் வீழ்த்தினர். பதவி ஆசையில் வீழ்ந்த சில பிரமுகர்கள் பின்பு செயலிழந்து போயினர். மகாசபை மகாநாட்டிற்கு கலந்துகொள்ள வந்த சிங்கள சகோதர அமைச்சருக்கு (vtH>vg;g) தமிழரசுக் கட்சி கறுப்பு கொடி காட்டியும் ஆர்ப்பாட்டமும் குழப்பமும் விளைவித்தது. பலதரப்பட்ட தடைகளையும் கொலை அச்சுறுத்தல்களையும் துச்சமாக மதித்து தலித் சமூகவிடுதலைக்காகவே தன் வாழ்நாள் பூராகவும் பணிபுரிந்த ஒரு உத்தம தலைவன் எம்.சி. என்றால் அது மிகையாகாது.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையே தலித் மக்களின் தாய்வீடு என்று கூறுவதும் பொருத்தமே.

## தோழர் எஸ்.ரீ.என். நாகரத்தினம்

வசதியான குடும்பத்தை சேர்ந்த தோழர் எஸ்.ரீ.என்.நாகரத்தினம் அவர்கள் சமூக விடுதலையின் வீரமிகு தளபதி. தோழரின் ஆரம்பகால பொது வாழ்வு சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலிருந்துதான் ஆரம்பமானது. 1960இல் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு சிறுபான்மைத் தமிழர் மகா சபையையும் பிளவுக்கு உட்படுத்தியது. தோழர் எம்.சி., டொமினிக்ஜீவா போன்றோர் மாஸ்கோ சார்பு நிலைப்பாட்டை எடுத்தனர். தோழர் டானியல், எஸ்.ரீ.என்.நாகரத்தினம், ரகுநாதன் போன்றோர் தோழர் சண்முகதாஸன் தலைமையிலான சீன சார்பு நிலைப்பாட்டை எடுத்ததுடன், சீன சார்பு கம்யுனிஸ்ட் கட்சியின் பின்புல ஆதரவுடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தையும் தொடங்கினர். இதில் தலித்துக்கள் மட்டுமல்ல, சமூக விடுதலையில் ஆர்வமுள்ள நல்லெண்ணம் கொண்ட மாற்று சமூகத்தவர்களும் இணைந்து செயல்பட்டனர். வெகுஜன இயக்க தலைமைக்கு தோழர் எஸ்.ரீ.என்.நாகரத்தினம் தலைமை ஏற்ற பின்தான் தீவிரமான போராட்டச் சூழல் ஆரம்பமானது. «அடிக்குப்பதில் திருப்பி அடிப்பது» தான் என்பதில் தோழர் நம்பிக்கை கொண்டவர். தீண்டாமைக்கு எதிரான போராடம் எங்கு நடந்தாலும் தோழர் எஸ்.ரி.என். அவர்களை அவ்விடத்தில் காணமுடியும். வசீகரமான சிரித்த முகத்துடன், தோழமையுடன் பழகும் பண்பும், கூர்ந்து கேட்டு பதில் கொடுக்கும் புத்திக் கூர்மையும் கொண்டவர். அனைத்துக்கும் மேலாக துணிவான செயல்பாடும், ஒரு தளபதிக்கு உரிய தகுதியையும் தோழர் எஸ்.ரி.என். இடம் காணமுடியும். மிகுந்த நகைச்சுவை உணர்வுடைய தோழரும் கூட.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தேருக்கு நெருப்புவைத்து (1968) அச்செயலுக்கு தோழர். எஸ்ரி.என் அவர்களே காரணுமும் என்றனர் விசமிகள். அன்றைய பொலிஸ் தலைமை அதிகாரிகளும், தமிழ்ச் சாதி மான்களும் ஒன்றிணைந்து தமது சகல அதிகாரங்களையும் பிரயோகித்து தோழர்.எஸ்.ரி.என்.அவர்களை கைதுசெய்துவிட முயன்ற போதும் தலித் சமூகத்தின் இறுக்கமான ஒற்றுமையும் பாதுகாப்பும் காரணமாக தோழர் எஸ்.ரி.என். அவர்களை கைது செய்ய முடியாது போனது. ஆறுமாதங்களின் பின் தோழர் தானாகவே நீதிமன்றத்தில் சரண் அடைந்து பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். தீவைப்புத் தொடர்பான வழக்கு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நடைபெற்று பின்பு அவர் நிரபராதி என விடுதலைசெய்யப்பட்டார். தோழரின் வீட்டை பொலிஸ்சார் தினமும் தேடுதல் செய்தும், தோழரின் குடும்பத்தவரை மிகுந்த மன உழைச்சலுக்கு உள்ளாக்கியபோதும் எஸ்.ரி.என். நாகரத்தினம் அவர்கள் எதற்கும் அஞ்சிடவில்லை. கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து செயல்பட்டார்.

1978 ம் ஆண்டு யாழ் வீரசிங்கம் பண்டபத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மகாநாடு இறதியாக நடைபெற்றது. தோழர் எஸ்.ரி.என். நாகரத்தினம் அவர்களை அடிக்கடி பின் நாட்களில் சுண்ணாகத்தில் உள்ள அவரது வியாபார ஸ்தாபனத்தில் சந்திக்கவும் போராட்டவிடயங்களைப் பற்றிய அனுபவங்களை அறிந்துகொள்ளவும் எனக்கு வாய்ப்புகள் கிடைத்தன. தலித் சமூகத்தின் துணிச்சலான தலைமைத்தளபதி தோழர் எஸ்.ரி.என். நாகரத்தினம் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

1961 ஒக்டோபர் 21 ல் பொலிஸ்தடையையும் மீறிய சுண்ணாகத்திலிருந்து ஆரம்பித்த எழுச்சியான புரட்சிகர ஊர்வலத்தை, அதுபோல சுண்ணாகத்திலிருந்து சங்கானை வரை நடந்த ஊர்வலத்தை சங்கானையிலிருந்து யாழ் நகர் நோக்கிய பிரமாண்டமான மேதின ஊர்வலத்தை, போயாதினத்தில் மேதினம் கொண்டாட தடை இருந்தபோது மேதின ஊர்வலம் வின்ர் படமாளிகையிலிருந்து திடீரென புறப்பட்ட புரட்சிகர ஊர்வல்தையும் அவ்ஊர்வலத்தை (பொன்னமாகடை சந்தி) சத்திர சந்தி தாண்ட தபால் நிலையத்துக்கு அண்மையில் பொலிஸ் தடியடி செய்தபோது தோழர்கள் மிக மோசமாக தாக்கப்பட்டபோது தனியார் காணியில் தொடர்ந்து பொதுக் கூட்டம் நடந்ததும் எஸ.ரி.என. போன்ற இளம் தலைவர்களின் மனோதிடத்தை தலித் சமூகத்துக்கான போர்க்குணத்தை நான் எண்ணி வியக்கிறேன்.

**தொடர்ச்சி-11 ஆம் பார்க்க...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலித்தியம் வினா? விடை.

**-சோபசக்தி-**

தலித் அரசியல் குறித்து ஏராளமான கேள்விகளும் விமர்சனங்களும் இணையத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் கூட்டங்களிலும் நேரிலும் முன்வைக்கப்படுகின்றன. இவற்றில் அநேகமானவை மிக எளிமையான கேள்விகளே. ஏற்கனவே சிறுபத்திரிகைத் தளங்களிலும் கூட்டங்களிலும் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் திரும்பத் திரும்பச் சொல்லி வந்திருக்கிறோம். இந்தக் கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்புவர்கள் அநேகமாகத் தலித் அல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். சாதியத்தின் கொடூரம் குறித்தும் அதன் தன்மைகள் குறித்தும் தலித்துகளுக்கு யாரும் பாடம் நடத்த வேண்டிய அவசியம் கிடையாது. தலித் மக்கள் தங்கள் வாழ்க்கையூடாக இவற்றை அனுபவிப்பவர்கள். ஆனால் சாதியம்இ அதன் நுட்பமான கட்டமைப்புஇ இந்துமதம்இ பண்பாடு குறித்தெல்லாம் வெள்ளாளர்களுக்கு அவசியம் கற்பித்தேயாக வேண்டியிருக்கிறது. ஒடுக்கப்படுபவர்களிடம் வந்து ஒடுக்குமுறைக்கு எதிராகப் பரப்புரை செய்வதைக் காட்டிலும் ஒடுக்கும் மக்கள் கூட்டத்திடையே போய் ஒடுக்குமுறைக்கு எதிராகப் பரப்புரை செய்வதுதான் அவசியமானதாகும். எனவே ஏற்கனவே வெள்ளாளர்களால் பரவலாக எழுப்பப்பட்ட கேள்விகளைத் தொகுத்து அவர்களுக்குப் பதிலும் பாடமும் சொல்லும் பகுதி இது. இந்த வினாவிடைப் பகுதி இந்த இதழிலிருந்து வடுவில் தொடச்சியாக வெளிவரும்:

## 1.தலித் சாதிகள் என்று என்னென்ன சாதிகளை வரையறுக்கிறீர்கள்?

தலித் சாதிளை நாங்கள் ஒருபோதும் வரையறுத்ததில்லை. அதை இந்துமத வருணாசிர தர்மமும் மனுவுமே வரையறுத்தார்கள். ஆதிக்க சாதியினர் அந்த வரையறையில் எந்த மாற்றமோ நெகிழ்வோ ஏற்படாதவாறு இன்றுவரை கட்டிக் காப்பாற்றி வருகிறார்கள். வரலாறு முழுவதும் இந்த வரையறையை உடைக்க தலித் மக்களும் இந்த வரையறையைக் காப்பாற்ற ஆதிக்க சாதியினரும் போராடிக்கொண்டேயிருக்கிறார்கள். வர்ணாசிரமத் தர்மப்படி அய்ந்தாவது வர்ணத்தினர் அல்லது அ- வர்ணத்தினர் அல்லது தீண்டத்தகாதோர் அல்லது பஞ்சமர் எனக் குறிப்பிடப்படுபவர்களையே நாங்கள் தலித்துகள் என்று அழைக்கிறோம். தலித் என்ற சொல் பஞ்சமர் அல்லது தீண்டத்தகாதோர் என்பதற்கான மாற்றுச் சொல் கிடையாது. தலித் என்ற சொல்லுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் அல்லது நொறுக்கப்பட்ட மக்கள் என்று பொருளாகும்.

## 2.என்னயிருந்தாலும் தலித் என்பது தமிழ் வார்த்தையில்லையே?

இதுவொரு சுத்துமாத்துக் கேள்வி. ஜனநாயகம், தேசம், சோசலிஸம், சூரியதேவன் என்று எண்ணற்ற பிறமொழிச் சொற்களை தமிழ்மொழி உள்வாங்கியிருக்கிறது. குறிப்பாக அரசியலிலும் அறிவியலிலும் இவ்வாறான எண்ணற்ற பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்து விட்டன. இதையெல்லாம் ஏற்றுக்கொள்பவர்கள் தலித் என்ற சொல்லை மட்டும் ஏற்க மறுப்பதுக்கு மொழிப் பற்று என்று பெயரல்ல. அதற்குப் பெயர் சாதிப் பற்று அல்லது சாதித் திமிர்.

## 3.பஞ்சமர் என்று ஏற்கனவே ஒரு சொல் புழக்கத்திலிருக்கிறதே?

ஆம், முதல் வேலையாக அந்தச் சொல்லை ஒழித்தாக வேண்டும். பஞ்சமர், அரிசனங்கள், சக்கிலி, சண்டாளர் என்பதெல்லாம் தலித்துகள் மீது மற்றவர்களால் சுமத்தப்பட்ட பெயர்கள். பஞ்சமர் என்ற சொல்லுக்கு அய்ந்தாவது வர்ணத்தினர் என்று பொருள். பஞ்சமர் என்ற சொல்லை ஒருவர் ஏற்றுக்கொண்டால் அவர் சாதியக் கோட்பாடான வர்ணாசிரமத் தத்துவத்தை ஏற்றுக்கொள்கிறார் என்றே பொருளாகும். பஞ்சமர் என்பது தலித்துகளை அவமானப்படுத்தும் ஒரு இழிவுச் சொல். தவிர அதுவும் தமிழ்ச் சொல்லல்லஇ அது வடமொழிச் சொல்லே என்பதையும் இந்தத் தனித் தமிழ் பற்றாளர்கள் தெரிந்துகொள்ளட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**4.முன்பெல்லாம் சிறுபான்மைத் தமிழர்கள் என்று சொன்னார்களே இப்போதும் அப்படி அழைக்க முடியாதா?**

இல்லை முடியாது. ஏனெனில் யுத்தத்திற்குப் பின்னால் ஏராளமான வெள்ளாளர்கள் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்துவிட்டதால் இப்போது ஈழத்தில் வெள்ளாளர்கள்தான் சிறுபான்மையினர். விரும்பினால் வெள்ளாளர்கள் தங்களைச் சிறுபான்மைத் தமிழர் என்று அழைத்துக்கொள்ளட்டும்.

**5.தலித் அரசியல் என்பது வெறுமனே விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல்தானே?**

நீங்களே அப்படி அவசரப்பட்டு முடிவெடுத்தால் எப்படி? புலிகள் மட்டுமல்ல இலங்கை அரசு, ஈபிஆர்எல்எவ், ஈபிடிபி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், கூட்டணியினர் என்று எவர் சாதியத்திற்கு எதிரான ஒரு சிறு செயலைச் செய்தாற்கூட அந்த விடயத்தில் நாங்கள் அவர்களை முற்றுமுழுதாக ஆதரிப்போம். அவர்களோடு சாதியத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இணைந்து போராடவும் தயாராயுள்ளோம். அதே போல் சாதியத்தைக் கட்டிக் காப்பாற்ற அல்லது மௌனமாய் கடந்து போக நினைப்பவர்கள் எவராயினும் அவர்கள் எமது பகைவர்களே. எனவே தலித் அரசியல் என்பது வெறுமனே புலியெதிர்ப்பு அரசியல் என்று சொல்வதற்கு முன்னால் சாதியத்தை ஒழிப்பதற்குக் கடந்த முப்பது வருடங்களாகப் புலிகள் என்ன செய்திருக்கிறார்கள் என்ற கேள்வியைத்தான் நீங்கள் முதலில் எழுப்பவேண்டும்.

**6.பொதுவாகவே ஈழத்தில் பிராமணர்கள் என்று சொல்வதுதான் வழக்கம். மார்க்சிய அறிஞர்கள் எழுத்தாளர்கள் என எல்லோருமே பிராமணர்கள் என்றுதான் பேசியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால் தலித் அரசியலாளர்கள் மட்டும் பார்ப்பனியம் பார்ப்பனர்கள் என்றெல்லாம் எழுதுகிறீர்களே?**

ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் பிராமணர்கள் என்று அழைப்பதுதான் இன்றுவரை பொதுவான போக்கு. அங்கேயும் பெரும்பாலான இடதுசாரிகளும் எழுத்தாளர்களும் அவ்வாறுதான் பேசியும் எழுதியும் வருகிறார்கள். சரி இந்தக் கேள்விக்கு தந்தை பெரியார் சொல்லும் மறுமொழியைக் கவனியுங்கள்:

பார்ப்பனர்களை பிராமணன் என்று கூறுபவனை மானமற்றவன் அல்லது இழிமகன் அல்லது மடையன் என்றுதான் நான் கூறுவேன். பார்ப்பனனை பிராமணன் என்று கூறுவதால் அவனது உயர்ந்த ஜாதித் தன்மையை நாமே ஆதரிப்பது போலவும் நாம் சூத்திரன் என்பதை ஒப்புக்கொள்வது போலவும் அல்லவா ஆகிறது? பார்ப்பனர் என்ற சொல்தான் சங்க இலக்கியங்களில்கூட இருக்கின்றது. பிராமணன் என்ற சொல் அவைகளில் இல்லை. சித்தர்கள் திருமூலர் போன்றவர்களின் பாடல்களில் கூட பிராமணன் என்ற சொல் கிடையாது. பார்ப்பனர்கள் தங்கள் உயர்வு குறிக்கவே அந்தச் சொல்லைப் புகுத்திக்கொண்டார்கள்.

**(தொடரும்)**

✦

---

**ஒருவன் பிறக்கும் போதே இழிசாதிக்காறன் ஆகின்றான்., உயர்சாதிக்காறன் ஆகின்றான். பிறவியிலேயே சாதி இணைகப்பட்டு விட்டது. அவன் எவ்வளவு படித்து பட்டம் பெற்றாலும் எந்த உயர்பதவி வகித்தாலும் பொருளாதாரத்தில் மிக உயர்ந்தவனாக இருந்தாலும் நம்நாட்டில் இருக்கின்றவரை இழிமகனும் கீழ்ச்சாதிக்காறனுமாகவே கருதப்படுவான். இந்நாட்டைவிட்டு போனால் வேண்டுமானால் தன் சாதியை மறைத்துக்கொள்ளலாமே தவிர இங்கிருக்கிருக்கிறவரை இழிமகனேயாவான்.**



www.tamilarangam.net

**குட்டிக்கதை**

நான் வேலைபார்க்கும் கடையில் சாப்பாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு அடிக்கடி வந்துபோவாள் அமலா. இதனால் எனக்கும் அவளுக்கும் நட்பு ஏற்பட்டு பலதடவைகள் பேசிக்கொண்டோம். நாட்டுப்பிரச்சனைகள், வீட்டுப்பிரச்சனைகள், அயலட்ட பிரச்சனைகள் சினிமா இப்படிப் பல விடயங்கள். அவளுக்கு என்மீது ஏற்பட்ட நம்பிக்கை வீட்டுத்தொலைபேசி, கைத்தொலைபேசி என்பன மூலமாகவும் நாம் உரையாடிக்கொள்வோம்.

அவளது பேச்சிலும் கருத்திலும் மொழிப்பற்று, பணப்பற்று, சாதிப்பற்று அவளது நெஞ்சில் நிறையவே பதிந்திருந்தது வெளிபடையாகவே தெரிந்தது.

ஒருமுறை எமது பிள்ளைகளை ஏன் தமிழ் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதில்லையெனக் கேட்டாள். தாய்மொழியின் அவசியம் பற்றியும், அது கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பற்றியும் எனக்கு கட்டளையிடுவதுபோல் கருத்துக் கூறினாள். நானோ அவளுடன் அரசியல் ரீதியான உரையாடல்களை ஆரம்பத்தில் இருந்தே தவிர்த்து வந்தேன். தமிழ் மொழி கற்க வேண்டி அவள் போட்ட கட்டளைக்கு
பதில் எதுவும் கூறாமல் மெல்லிய புன்னகையுடன் மௌனித்துக் கொண்டேன்.


ஒருநாள் திடீரெனக் கேட்டாள்

நீங்கள் என்னாக்கள்?
எனக்குப் புரிந்துவிட்டது. புரியாதவனைக் போல் நான் தமிழாக்கள் என்றேன்.
அது தெரியுது நீங்க ஊரில என்னாக்கள் மீண்டும் கேட்டாள்.
நான் சொல்லலாமா? விடலாமா? சாதக பாதகங்களை கூட்டிக்கழித்துப் பார்த்தேன். உண்மையைச் சொன்னால் எமக்குள் உண்டான நட்பு அறுந்து விடுமோ என ஒருகணம் தயங்கினேன். இன்றைக்கு மறைத்தாலும் இன்னுமொருநாள் தெரியத்தானே போகிறது. உசாரானேன்...

“நான் பறையர் சாதியைச் சேர்ந்தவன“
“பார்த்தால் தெரியேல்லையே“
“முகத்தப்பார்த்தா சாதியக் கண்டுபிடிக்கிறயள“
“நீங்கள் நல்ல டீசண்டா இருக்கிறயள், அவயளபற்றி அப்பா, அண்ணன்மார் நல்ல வடிவாச் சொன்னவ, அவைக்கு கையெல்லாம் பொருக்கா இருக்குமாம், ஊத்தையாய் இருப்பினமாம், வெடில் மணக்குமாம், கதைக்கப் பேசத் தெரியாதாம் உங்களப் பார்த்தா அப்படித் தெரியேல்ல.“

“ஊரில எங்கள எங்க நல்ல வேல செய்யவிட்டியள்? கக்கூசு எடுக்கிறதும், செத்தவீட்டுக்கு மேளம் அடிக்கிறதும், ஆஸ்பத்திரி கழுவிறதும்தானே நீங்கள் எங்களுக்க குடுத்த வேல. அந்த வேல செய்தால் உடம்பில சந்தணமும், சாம்பிராணியுமா மணக்கும். நாங்கள் கதைக்கிறது பேசுறது எல்லாமே உங்களில உள்ள கோபத்தின்ர வெளிப்பாடுதான்.“

“எண்டாலும் நான் நம்பமாட்டன். ஆனால் கெதியாய்க் கண்டுபிடிச்சிடுவன்“உறுதியாய் கூறிச்சென்றாள்
மீண்டும் ஒருநாள் கடைக்கு வந்தாள். நான் “ஹலோ“ என்றேன்.
அவள் கண்டும் காணாமலும் நின்றாள்.
மீண்டும் நான்
“ஹலோ“ என்றேன். என்னை எப்போதுமே தேடிவந்து பேசிவிட்டுச் செல்லும் அமலா விரும்பாத புன்னகையுடன் வெறுப்பாகச் சொன்னாள். “இப்ப நேரமில்ல பிறகு கதைக்கிறன்...........“



-சித்தன்-

www.tamilarangam.net

**-கரவைதாசன்-**

# கறுப்பாகிக் கிடந்த ஈழமண்ணில் புதிதாய் எழுந்து வீழ்ந்த விதை

யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமூகத்தின் முரண்பாடுகளை விளங்கிக் கொண்டு அச்சமூகத்தில் அசைவியக்கத்தினை ஏற்படுத்திய கருத்துப் பொறிகளில் மாக்சிய வழியில் 1950ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தோன்றிய அமைப்பாளர்கள் (System Builder) மாதிரி உருவை வடிவமைத்தவர்கள் (model builder) மார்க்கத்தினை கண்டறிந்தவர்கள் (pathfinder) வரிசையில் வாழ்ந்து பணி செய்த தோழர்கள் வரிசையில் இந்த ஆண்டில், முதலில் அகில இலங்கை சிறுபான்மை மகாசபையைச் சேர்ந்த மா. செல்லத்தம்பி அவர்களை இழந்து தவித்து நின்றபோது, மகாசபையைச்சேர்ந்த இன்னொரு தோழர். துன்னாலையைச் சேர்ந்த செல்லையாவையும் இழந்துவிட்டோம் என்ற செய்தி வந்து சேர்ந்தது.


தோழர் செல்லையா அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார். அவர் நிகழ்வுகளை புனைவின்றி பதிவு செய்வதினூடே ஐம்பதுகளில் அடக்கு முறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த ஒரு சமூகத்தின் வரலாற்றினையும் பதிவு செய்யும் வாய்ப்பு கிட்டுவதை உணர்கிறேன். அன்று ஈழத்திலே ஒரே மொழியை பேசி, ஒரே பிரதேசத்தில் ஒரே மாதிரியான வாழ்வை வாழ முடியாமல் தடுத்து, நாகரீகமற்ற முறையில் எங்கள் மண்ணின் மைந்தர்கள் அடக்கி ஒடுக்கப் பட்டபோது , கிளர்ந்தெழுந்த வரலாற்றினை பதிவு செய்யும் முயற்சியாகவும் இதனைக் கொள்ளலாம். எனக்கு எட்டியவரை கிடைத்த தகவல்களின் வழி நான் வாழ்ந்த கிராமத்தில் வாழ்ந்த இவரோடொத்த தோழர்களையும் இவர்களது செயற்பாடுகளையும் ஆவணப்படுத்த நினைக்கிறேன்.

அமரர் சின்னத்தம்பி செல்லையா அவர்கள் ஈழத்தின் வடமராட்சிப் பகுதியில் துன்னாலை மேற்கில் 22-04-1932ல் சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் இளைய மகனாகப் பிறந்தார். யாழ் ஞானசாரியார் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை தொடங்கிய இவர் தொடர்ந்து அரசினரால் நடத்தப்பட்ட பாடசாலை (model school) நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் ஆங்கில மொழி மூலம் தனது இடைநிலைக் கல்வியினை கற்று தேறினார். தனது ஊரைச்சேர்ந்த பூங்கிளி என்ற பெண்ணை வாழ்க்கைத் துணையாகச் சேர்ந்து ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்று ஐவரையும் ஆசிரியைகளாக உருவாக்கியுள்ளார். அமரர் அவர்கள் இடைநிலைக் கல்வியினை தேறிய காலத்திலேயே வாழைச்சேனை காகிதத்தொழிற்சாலையில் கணக்காளராக வேலைக்க மர்த்தப்பட்டார்.

சமூகச் சீர்திருத்த எண்ணமும் அடக்குமுறைக்கெதிரான போராட்டச் சிந்தனையும் இவரை கம்யூனிசக் கட்சியிலும் அதனைத் தொடர்ந்து எம.சி. சுப்பிரமணியம் அவர்களை தலைமையாகக் கொண்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலும் இணைந்து செயற்பட வைத்தது. வடமராட்சியில் மகாசபையின் கிளையினை அமைத்து செயற்பட்ட தோழர்களான ஆ.ம. செல்லத்துரை, கவிஞர் பசுபதி, மு.செல்வபாக்கியம், கிருஸ்ணபிள்ளை, ஜீ.ஜீ. மகாலிங்கம், முருகேசு, மா.செல்லத்தம்பி, ஆ.குலேந்திரம், வ.சின்னத்தம்பி, ஆ.வன்னியசிங்கம், வீ.ஸ்.சிவபாதம், வ.தங்கமணி மற்றும் இரகுநாதன், தெணியான், க.இராசரத்தினம் ஆகியோருடன் இணைந்து முன்னணியில் நின்று செயற்பட்டார். மகாசபையின் பொதுக் காரியதரசியாக சட்டத்தரணி பீ.ஜே.அன்ரனி அவர்கள் இருந்து உழைத்துக் கொண்டிருந்தபோது அமரர் அவர்கள் நிர்வாகக் காரியதரசியாக இருந்து செயற்பட்டார். அப்போது உத்தியோகமா? சமூகப்பணியா? எனக் கேள்வி எழுந்தபோது உத்தியோகத்தினை விட்டு வந்து சமூகப் பணிகளிலே முழுவதுமாக ஈடுபட்டார். இப்படியாக இவர் மட்டுமன்றி எம.சி.சுப்பிரமணியம் எலிபன்ட் கவுசில் பார்த்த உத்தியோகத்தை துறந்தார். கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த வீ.எஸ்.சிவபாதம், ஆ.சிவகுரு இருவரும் கூட தாங்கள் அக்குறணையில் வகித்து வந்த பண்டகசாலைப் பொறுப்பாளர் உத்தியோகங்களை விட்டு வந்து (இப்படிப் பலர்) சமூக மாற்றத்திறகாக எழுச்சியுடன் ஈடுபட்டு உழைத்தார்கள்.

அமரர் அவர்கள் 1956ல் பொன்.கந்தையா அவர்களின் தேர்தல் வெற்றிக்காக கிராம் கிரமமாக சென்று பிரச்சாரக் கூட்டங்களில் ஈடுபட்டார். சிறந்த பேச்சாளரான இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் கனல் பறக்க அரசியல் மேடைகளில் பேசிவந்தார். இவர் போன்ற தோழர்களின் தொடர்ச்சியான உழைப்பு வடக்கு கிழக்கிலிருந்து பாராளுமன்றத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தோழர்.பொன்.கந்தையா அவர்கள்தான் என்ற வரலாற்றினை உருவாக்கியது.

இதே 1956ல் பீற்றர் கெனமன் வடமராட்சி வருகைதந்து மாலிசந்தியில் பிரமாண்டமான கூட்டமொன்று நடைபெற்றது. அதனையொட்டி வடமராட்சியில் சயிக்கிள் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. அதில் பீற்றர் கெனமனும் பங்குபற்றினார். வடமராட்சியின் முன்னணித் தோழர்களுடன் அமரர் தலைவர் செல்லையா அவர்களும் இரண்டிலும் கலந்துகொண்டார். அச்சயிக்கிள் ஊர்வலத்தில் பெண்களும் கலந்துகொண்டிருந்தனர். கன்பொல்லைக் கிராமத்தைச் சேர்ந்த வீ.எஸ்.சிவபாதம் அவர்களின் சகோதரி லட்சுமி அவர்களும் அவ்வூர்வலத்தில் சேர்ந்திருந்தார். அப்போது வீ.எஸ்.சிவபாதம் அவர்கள் S.S.C படித்துக் கொண்டிருந்த மாணவன். இவர் அடுத்த நாள் பாடசாலைக்கு போகும் வழியில், வட்டவிதானை என அழைக்கப்படும் சாதி வெறியர்களுடைய சண்டியன் சித்தன் என்பவன் (அக்காலத்தில் வட்டவிதானை என அழைக்கப்படும் அரச அதிகாரமற்ற உயர்சாதி



கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் இருந்திருக்கிறார்கள்.) வீ.எஸ்.சிவபாதம் அவர்களை வழிமறித்து அவரிடம் அவரது சகோதரியை மிக அவதூறாகப் பேசி அவரைத் துவரந்தடியால் தாக்கியும் உள்ளார். பதிலுக்கு வீ.எஸ்.சிவபாதம் அவர்கள் அவர் பென்சில் சீவுவதற்காக வைத்திருந்த பேனாக்கத்தியால் சித்தனை தாக்கியுள்ளார். இச்சம்பவமானது அன்று சாதி அதிகாரச் சண்டித்தனத்தை உசுப்பிய சம்பவமாக அமைந்திருந்தது. அன்று மாலை சிவபாதம் அவர்களுடைய வீடு தீக்கிரையாக்கப்பட்டது. சேதியறிந்து எம்.சி.அவர்களுடன் அமரர் செல்லையா அவர்களும் அவ்விடம் வந்து தோழமையுடன் அவர்களுடன் சேர்ந்து எதிர் நடவடிக்கைகளில் செற்பட்டுள்ளார். கன்பொல்லையின் எல்லையை அண்டிய இடைக்குறிச்சியில் வாழ்ந்து வந்த வீ.ஸ்.சிவபாதம் அவர்களது பெற்றோர் குடும்பமாக பாதுகாப்பு கருதி கன்பொல்லையின் மையப்பகுதிக்கு அவரது பெரிய தகப்பனாரின் காணிக்கு இடம் பெயர்ந்தார்கள்.
இப்படி பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்த ஒரு சம்பவம் சங்கானை நிச்சாமம் கிராமத்தில் தோழர் மாநா.முத்தையா அவர்களுக்கும் நேர்ந்தது.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் பருத்தித்துறைத் தொகுதி எம்பியாக இருந்தபோது, சோல்பரிக் கொமிசன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது. அப்போது சாதிக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட கிராமங்களை கொமிசனரை அழைத்துச் சென்று காட்டுவதென சிறுபான்மைத் தமிழர் மகாசபை முடிவெடுத்திருந்தது.
ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. இருந்தபோதும் சோல்பரிகொமிசனரை இரகசியமாக அழைத்துவந்து கன்பொல்லைக் கிராமத்தில் எரிந்த வீடுகளை புகைந்துகொண்டிருக்கும் நிலையில் காட்டியுள்ளார்கள். இதற்குப் பின்னணியல் கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த ஆசையண்ண என அழைக்கப்படும் தோழர். இராசையா அவர்களும், டி.ஜேம்ஸ், வி.டி.கணபதிப்பிள்ளை, எம்.சி.சப்பிரமணியம், இருந்தார்கள். கூடவே தலைவர் செல்லையாவும் கன்பொல்லைக் கிராமத்தைச் சேர்ந்த இன்னொரு சமசமாசத் தோழர் பைரவன்.மாசிலாமணி அவர்களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. வீடு திரும்பும் வழியில் நெல்லியடிச் சந்தியில் வைத்து வி.டி.கணபதிப்பிள்ளை, எம்.சி. சுப்பிரமணியம், டி.ஜேம்ஸ் ஆகிய மூவரும் சாதிவெறியர்களால் நையப்புடைக்கப் பட்டார்களெனன்பது பல இடங்களில் பதிவாகியுள்ளது.

பொன்.கந்தையா அவர்களின் காலத்தில் அவர் கல்வி அமைச்சர் டபிள்யூ. தகநாயக்க அவர்களின் உதவியுடன் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் அனுசரணையுடன் தமிழ்ப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவிற்காகப் பாடுபாட்டார். உள்ளூராட்சி சபைகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர். அப்போது நெல்லியடி பட்டினசபைத் தேர்தலில் கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த தோழர்.ஆ.சிவகுரு தொடர்ந்து இரண்டு தடவையாக வேட்பாளராக நிறுத்தப்பட்டு நட்சத்திரச் சின்னத்தில் போட்டியிட்டார். முதல் தடவை 22 வாக்குகள் வித்தியாசத்திலும் இரண்டாவது தடவை பத்திற்குட்பட்ட வாக்குகள் வித்தியாசத்திலும் அவர் தோல்வியை சந்திக்க நேர்ந்தது. அப்போதெல்லாம் அத்தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் அமரர் செல்லையா அவர்கள் கலந்துகொண்டு தோழர். ஆ.சிவகுரு அவர்களுக்கு ஆதரவு தேடி பேசி வந்துள்ளார். (பின்பொருதடவை கன்பொல்லையைச் சேர்ந்த தோழர்.ஆண்டி.சுந்தரம் அவர்களும் நெல்லியடி பட்டினசபைத் தேர்தலில் போட்டியிட்டார்.) சமகாலத்தில் சங்கானைப் பட்டினசபையில் போட்டியிட்ட மான்.நா.முத்தையா, பி.நாகலிங்கம், வி.வைரமுத்து, ப.பசுபதி, வல்வெட்டித்துறை பட்டினசபையில் போட்டியிட்ட தோழர்.திருப்பதி, சுன்னாகம் பட்டினசபையில் போட்டியிட்ட செனட்டர்.நாகலிங்கம் ஆகியோர் வெற்றிபெற்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எம்.சி.அவர்களின் வலுமிக்க தோழராக செல்லையா அவர்கள் விளங்கினார். மகாசபையின் வாலிப முன்னணியில் வடமராட்சியில் ஆசிரியர் ஜி.ஜி.மகாலிங்கம் அவர்களுடன் சேர்ந்து தலைமை தாங்கி முனைப்புடன் செயற்பட்டார். அந்நாட்களில் வடமராட்சியில் யாழ்ப்பாணம் நோக்கி ஏற்படுத்தப்பட்ட எழுச்சி மிக்க சயிக்கிள் ஊர்வலத்தினை ஒழுங்கு செய்து தலைமை தாங்கி நடத்திச் சென்றார். இவ் ஊர்வலத்தில் யாழ்அணி, கரவெட்டி கிழக்குஅணி, பருத்தித்துறைஅணி, துன்னாலைஅணி, மட்டுவில்அணி, மானிப்பாய்அணி, காங்கேசந்துறைஅணி, தீவுஅணி, இமையாணன்அணி, கம்பர்மலைஅணி, என நூற்றுக்கணக்கான அணியினருடன் கன்பொல்லைஅணியும் ஆசிரியர் க.இராசரத்தினம் அவர்களின் முனைப்பில் அணிவகுத்து நின்றது அந்நாட்களில் வரலாறு. இச்சயிக்கிள் ஊர்வலம் சிறப்புற நடந்தேறியமைக்காக அமரர் செல்லையா அவர்கள் அவ்வேளை பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டார்.

1966 மாசி மாதம் 14ந் திகதி கன்பொல்லைக் கிராமத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் கல்வி கற்பதை முன் வைத்து ஓர் பாடசாலை (யா/ சிறீ நாரதவித்தியாலயம்) க.இராசரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலையை நிறுவுவதற்கு நிலத்திற்கு சொந்தமானவர் நிலத்தினை வழங்கி ஒத்துழைத்தபோது ஒருவர் மட்டும் மறுத்து குழப்பம் விளைவித்தார். அவ் அங்குராப்பணக் கூட்டத்தில் தலைவர் செல்லையா அவர்களும் கலந்திருந்தார். எப்பொழுதும் பிரச்சனைகள் வரும்போது அதற்கு முகம் கொடுக்கும் அமரர் அவர்கள் குழப்பம் விழைவித்தவரை அணுகி சமாதானம் பேசியுள்ளார். விடயம்

www.tamilarangam.net

முற்றி விவகாரமாகி கைகலப்பு அளவிற்கு போனபோது கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த மு.தவராசா (தவம்) இடையில் தலையிடவே பொலிஸ் வந்து அமரர். செல்லையா அவர்களையும் தவம் அவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்திருந்தது. மறுநாள் எம்.சி. அவர்களும் வ.தங்கமணி அவர்களும் பொலிஸ் நிலையம் சென்று வ.தங்கமணி அவர்கள் பிணைக்கையெழுத்திட்டு இருவரையும் அழைத்து வந்தார். பின்பு அரசு இப்பாடசாலையை பொறுப்பேற்று இப்பாடசாலையூடாக பன்னிரெண்டு சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. இன்று பத்தாம் வகுப்புவரை இங்கே மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.

கன்பொல்லைக் கிராம மக்கள் தொடர்ச்சியாக சாதியப் போராட்டத்தினை நடத்திவந்தபோது ஒரு கம்யூனிஸ்ட் என்ற வகையிலும் அனைத்திலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் முன்னணி உறுப்பினர் என்ற வகையிலும் தோழமையோடு அவர்களுடன் அமரர் செல்லையா அவர்கள் இணைந்து செயற்பட்டு வந்துள்ளார்.

தொடர்ச்சியாக சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் முன்னெடுத்த தேனீர்க்கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் என பஞ்சமர்களின் சமத்துவத்திற்கான அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். ஒரு சமையம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரவேசத்தின்போது மண்டையில் பலமாக அடிபட்டார். இவரது கிராமத்தினை அண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வல்லிபுரக் கோவில் பிரவேசத்தின்போது எம்.சி.யும் அமரர் அவர்களும், தவயோகம், மற்றும் துன்னாலையைச் சேர்ந்த C.T.B செல்லையா, அரசடி குழந்தையப்பா, க.இராசரத்தினம் மற்றும் தானும் முன்வரிசையில்

கோவிலுக்குள் சென்றபோது எங்களின் வீட்டு அர்ச்சனைத் தட்டைத்தான் எம்.சி. வாங்கி முதல் முதலாக அர்ச்சனை செய்வித்தார் என எனது தந்தையார் மு.தவராசா சொல்லி மகிழ்வார். அங்கு கோயில் உள் மண்டபத்தில் துவக்குகள் சாத்தி வைக்கப்பட்டிருந்ததை தாங்கள் கண்டதாகவும் கோயில் மணியம் வே.க.வல்லிபுரமும் சில அடியாட்களும் இரண்டாம் மண்டபத்தில் நின்றதாகவும், எம்.சி. யின் ஏற்பாட்டில் பொலிசும், ஆமியும் பந்தோபஸ்திற்கு வந்து நின்றதாகவும். இருந்தபோதும் தாங்களும் பண்டித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்குள் ஆயுதங்களை கொண்டுபோன அதே பாணியில் பொங்கல் பானைக்குள் கைக்குண்டுகளை கொண்டு போனதாகவும் ஆமி நின்றபடியால் எந்தவித அசம்பாவிதமுமின்றி ஆலயப் பிரவேசம் நடந்ததாகவும் அவர் கூறினார்.

எம்.சி. அவர்கள் நியமன எம்பியாக இருந்தபோது அமரர் அவர்கள் சிபார்சு செய்து தனது கிராமத்தில் ஆட்டுப்பட்டிக் குறிச்சியில் சாதிமான் அருமைத்துரை என்பவனுக்கு சொந்தமாயிருந்த எழுபத்தைந்து பரப்பு காணியினை அரசினால் சுவீகரித்து அங்கு வாழ்ந்த பஞ்சமர்களுக்கு உரிமையாக்கினார். சாதியச் சண்டையில் ஆயள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த தன் கிராமத்தினைச் சேர்ந்த மாம்பழன், சீனியன் சகோதரர்களை பிரதம மந்திரி சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை வாங்கிக் கொடுத்தார். மேற்கொண்ட காரியங்களுக்காக இவரது உயிருக்கு அச்சுறுத்தல் வந்தபோதும் அதனை துச்சமாக மதித்து எம்.சிக்கூடாக இவற்றை செய்து முடித்தார்.

அமரர் அவர்களின் தொடர்ச்சியான பணிகளினூடே சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் நிர்வாகக் காரியதரிசியாகவும், கட்டைவேலி, உடுப்பிட்டி தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், பனை அபிவிருத்தி பணிப்பாளர்சபை பணிப்பாளராகவும், கடற்தொழில் அமைச்சின் பணிப்பாளர்சபை உறுப்பினராகவும், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராகவும், சமாதான நீதிவானாகவும் பயணித்துள்ளார்.

இவர் போன்ற சமூக விடுதலைப் போராளிகள் இரத்தம், வியர்வை, சிறைவதைக் கொடுமை இவற்றினூடேதான் இன்றை ஈழத்தில் வாழும் பஞ்சம இளம் சந்ததி இன்றுவரையுள்ள சமத்துவத்தினை அனுபவிக்கின்றது. இப்போராளிகள் கறுப்பாகிக் கிடந்த ஈழமண்ணில் எழுந்து பழுத்து வீழ்ந்தாலும், எல்லாம் விலகிப்போச்சு என்ற வெறும் தோற்றப்பாடு இருக்கும் வரை, என்றும் புதிய விதைகளே.

**('உயிர்மை' சஞ்சிகையில் கரவைதாசனால் எழுதப்பட்ட கட்டுரை)**
**-நன்றி-**

---

***இந்த நாட்டில் சாதிமுறைப் பிரிவு - கீழ்சாதி, மேல்சாதி இருந்துவருகிறது. ஆட்சியும் ஆதிக்கமும் மேல்சாதிக்கு சொந்தம், அவர்களிடம் அல்லலும் அவதியும் படுவது கீழ்சாதிக்காறருக்கு சொந்தம். இது சாத்திரப்படி, பாதுகாக்கப்படுகிறது. எந்தவிலை கொடுத்தாயினும் இதை மாற்றுவதுதான் எங்கள் முயற்சி.***

**-பெரியார்-**

www.tamilarangam.net

# 35 ஆவது இலக்கியச்சந்திப்பு



## ஜேர்மன் ஸ்ருட்காட் நகரில் யூன் 14 ஆம் 15ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில் பல நாடுகளிலிருந்தும் அநேகமானோர் வந்து கலந்து கொண்டனர். சிவராஜா அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்திய பிற்பாடு வந்தவர்களின் சுய அறிமுகங்களுடன் முதலாம் நாள் நிகழ்ச்சி ஆரம்பமானது.



அதைத் தொடர்ந்து இலக்கியச் சந்திப்பின் ஸ்தாபகர்களில் மூத்தவரான மறைந்த தோழர் பராமாஸ்டர் அவர்களால் எடுக்கப்பட்ட ஒளிப்படக் காட்சிகள் பார்வைக்குள்ளாக்கப்பட்டது.

அடுத்த நிகழ்ச்சியாக புகலிட சஞ்சிகைகளான உயிர்மை இ உயிர்நிழல் சஞ்சிகைகளுடன் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் வெளியிடப்பட்டுவரும் வடு எனும் பத்திரிகையும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதில் உயிர்மை சஞ்சிகையை நோர்வேயிலிருந்து வருகைதந்த சரவணன் அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார். உயிர்நிழல் சஞ்சிகையை பிரான்சிலிருந்து கலந்து கொண்ட பிரதீபன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். அடுத்ததாக வடு எனும் பத்திரிகையை அதன் ஆசிரியர் குழுவிலொருவரான தேவதாசன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். பொதுவாகவே அவர்கள் மாற்று சஞ்சிகைகள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் பற்றிக் கூறியதோடு அதன் வெளியீட்டுச்சிரமங்கள் பற்றியெல்லாம் பேசினார்கள். குறிப்பாக வடு பத்திரிகை பற்றிக் கூறிய தேவதாசன் அவர்கள் தலித் சமூகங்களின் நலன் சார்ந்து வெளிவரும் வடு பத்திரிகையானது மிக எளிமையான புரிதலுக்குரிய மொழிநடையில் வெளியிட வேண்டும் என்பதே எமது நோக்கம் என்றும் கூறினார்.

தொடர் நிகழ்வாக லக்சுமி அவர்களின் நெறிப்படுத்தலில் இணைய சஞ்சிகைகள் எனும் தலைப்பில் சரவணன் உரை நிகழ்த்தினார். இணைய சஞ்சிகைகளின் தோற்றங்களும் அதன் வளர்ச்சி நிலைகள் பற்றியும் குறிப்பிட்டுப் பேசியதோடு, அதை இலகுவாக பயன் படுத்தும் வழி முறைகளை சகலரும் அறிந்து கொள்ளும் சூழலை உருவாக்க முயற்சித்து வருவதாகவும் கூறினார். தமிழிலே இணைய சஞ்சிகைகள் அதிகளவு சுதந்திரமாக வெளிவருதற்கு புலிகளிலிருந்து கருணாவின் வெளியேற்றமும் ஒரு காத்திரமான பின்புலம் என்றே கூறலாம். எனவும் குறிப்பிட்டார். இந்நிகழ்வின் தலைப்பு தொடர்பான கலந்துரைடயால் நிகழ்வில் தேசம் இணையத்தளம் பல்வேறுவகையான விமர்சனங்களுக்குள்ளானது.



35 ஆவது இலக்கியச் சந்திப்பின் முதல் நாள் அமர்வின் இறுதி நிகழ்வாக 1985 ஆம் ஆண்டு வெளிவந்த ியவசஉைம ளரளமனைெ என்பவரின் னயள ியசகரஅஇனநை பநளஉாஉைாவந நனைௌ அழசனநசள எனும் ஜேர்மன் மொழி நாவல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நாவலை ஜேர்மனியைச் சேர்ந்த விரிவுரையாளரான அனெ்றற எனும் பெண்மணி அறிமுகப்படுத்தியதோடு அந்நாவலின் அனைத்து உள்ளடக்கத்தையும் விளக்கியுரைத்தார். அவரின் ஜேர்மனிய மொழியுரையை சுசீந்திரன் அவர்கள் எமக்கு மிகச் சிறப்பான வகையில் தமிழில் மொழிபெயர்த்தார். மேற்படி நாவலானது ஜேர்மனிய இயக்குணரான வழஅ வலமறநச என்பவரால் திரைப்படமாக்கப்பட்டும் உள்ளது. அது பிரான்ஸ் மொழியில் டந ியசகரஅ -ாளைவழசைந ன ர ெ அநசவசநைச- எனும் பெயரில் 2006 இல் திரையிடப்பட்டது.

www.tamilarangam.net



## இரண்டாம் நாள் அமர்வு:

முதலாவது நிகழ்வாக இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு இடையிலான இன்றைய நிலை எனும் தலைப்பில் உரையாடல் ஆரம்பமானது. இவ்வுரையாடலை பௌசர் அவர்கள் நெறிப்படுத்த நிர்மலா, சரவணன், கலையரசன், அசுரா, ராகவன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். இவர்களது உரையாடலில் கிழக்குமாகாணத்தின் இன்றைய நிலை, முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட பிரச்சனை, மலையகமக்களின் வாழ்வியலும், அவர்கள் துயரங்களும், தலித் சமூகத்தின் எதிர்காலம் பற்றியெல்லாம் பேசப்பட்டது. இதில் பலரும் இலங்கைப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள அரசினால் சிறுபான்மை இனங்களுக்கு இழைக்கப்படும் அரசியல் விரோதங்கள் பற்றிப் பேசியபோதும், தலித் சமூகம் சார்ந்து உரையாற்றிய அசுரா அவர்கள் பேசப்படும் இலங்கைப் பேரினவாதம் எனும் கருத்து நிலையில் தமக்கு உடன் பாடில்லை என்பதாகப் பேசினார். தமிழ்த் தேசவிடுதலை எனும் பெயரில் தொடங்கப்பட்ட அறியாத்திற்குள் (போராட்டம்) சிக்குண்டு போனவர்கள் தலித் சமூகத்தினர். அப்போராட்டமானது தலித் சமூக நலன் சார்ந்த போராட்டமல்ல. தலித் சமூகங்கள் மீது யாழ் மேலா-திக்கத்தினால் இழைக்கப்பட்ட சமூக ஒடுக்கு முறைக்கெதிரான ஓர் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழ்த் தேசிய விடுதலை எனும் அறியாம் நிகழத்தொடங்கியது. அதனுள் தலித் சமூகமும் உள்வாங்கப்பட்டதானது ஒரு துயரமான நிகழ்வாக அமைந்தது. தலித் சமூகங்களின் சமூக வளர்ச்சிக்காக சிங்கள இனம் காட்டிய அக்கறையை வரலாறு தொலைத்துவிடவில்லை. யாழ் மேலாதிக்கத்திற்கு எதிராக நிகழ்ந்த போராட்டங்களின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக வழக்காடுவதற்காக தமிழ் தேசிய வடுதலையைக் கோரிய அப்புக்காத்துப் போராளிகள் எவரும் முன்வராதபோது சிங்களச் சட்டத்தரணிகளே தலித் சமூகங்களின் சார்பாக வழக்காட முன்வந்தவர்கள். இதுபோல் பல சம்பவங்களை நாம் கூறலாம். எனவேதான் சிங்களப் பேரினவாதம் எனும் கருத்து நிலையில் எமக்கு உடன் பாடில்லை என்பதாக அசுரா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்.



மேற்படி தலையங்கத்தில் நிகழ்ந்த கருத்துரைப்புகளைத் தொடர்ந்து நிகழ்ந்த கலந்துரையாடல் மிகச் சிறப்பாக அமைந்தது. குறிப்பாக தற்போதைய கிழக்கு மாகாணத்து நிலைமை பற்றி அதிகமாகப் பேசப்பட்டது.

ஐரோப்பிய பெண்கள் சந்திப்பு நிகழ்த்துபவர்களால் வெளியிடப்பட்ட மை , இசை பிழியப்பட்ட வீணை எனும் தலைப்பைக் கொண்ட இரண்டு கவிதைத் தொகுப்பு நூல்கள் விமர்சனம் செய்யப்பட்டது. அவ்விமர்சனத்தை உமா அவர்கள் நிகழ்த்தினார்.

✦

---

**(3ம் பக்கத் தொடர்ச்சி)**

ீதித் திட்டம் மூலம் தலித் சமூகத்தை பிரித்தனர். அந்த சதிதான் தமிழ் ஈழம் . சாதிபேதம் இல்லை என்று நாடகம் ஆடி இராசலிங்கத்தை பா.ம.உ. ஆக்கி தலித்துக்களின் மிக இறுக்கமான ஒற்றுமைக்கு உலைவைத்தனர்.

காலப்போக்கில் மிதவாத தமிழ் அரசியல் தலைமையின் சுய ரூபத்தை தமிழ் வாலிபர்கள் கண்டுகொண்டதுடன் ஆயுத போராட்டம் சமூக விடுதலைப் போராட்டத்தை பின் தள்ளியது. தலித் தலைமைகளின் வயோதிபமும் அவர்களின் இவ்வுலக பிரிவும் நாட்டில் ஏற்பட்ட யுத்தமும் இடப் பெயர்வும் தலித்துக்களின் சப உரிமைக்கான போராட்டத்தை மிக மிக பின்தள்ளிய போதும் தமிழர்கள் மத்தியில் உள்ள சாதிவெறி உணர்வு புற்றுநோய் போல தொடர்கிறது என்பது தான் உண்மை. துப்பாக்கிகள் மக்களை நோக்கி நீட்டப்பட்டுள்ள காரணத்தால் மக்கள் (தலித்துக்கள்) மௌனம் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**தொடரும் . . . . .**

✦

---

www.tamilarangam.net

# நீண்ட நாள் நண்பனுக்கு

உனக்குச் சொல்கிறேன்
நான் துன்பப்பட்ட நாட்கள்
துயரமானவை.
பசுங்குருத்து கருகிய மனமாக
வேதனையின் புண்களைச்
சொல்ல ஆளில்லாக்காலமது.
கோயிலுக்குள் நுளையாதே
தேனீர்க் கடைக்குள் கால்வையாதே - ஊரில்
தலித்தாக என்னைக் கொத்திய
கழுகுகளின் சந்தோசத்தில் நான்
மீண்டும் மீண்டும் மரணித்தேன்.

மிடுக்காகக் கோட்டும், ரையுடனும்
திரிந்தாலும்
அன்னியத் தெருக்களில்
கறுப்பனாகக் கூனிக்குறுகி
வாழ்வே ஒரு போராட்டமாகி
வெட்டவெளி மனிதனென
அர்த்தம் தேடி அலையும்
வீணனாகிப் போவேனா?

என்னை வெட்ட
என்னையே சூத்திரமாக்கும்
போர்முனையில் - மண்ணாங்கட்டி
நதிமூலம் அறியா எதிரியின் எதிரியுடன்
கைகோர்க்கும்
புண்ணாக்கு தந்திரங்கள்.....

இனியெல்லாம் காரிருள்
கண்டத்தில்
மனமகிழாக் காட்சிதான்!
வெள்ளி உதிர்கையில்
உதயமாகும்......
மீண்டும் குரல் கொடுத்து
கரும்பனையாக எழுகையில்
வெள்ளாளனும், பிராமணனும்
மறுமுறை உரைப்போம்
எங்கள் தத்துவ ஞானிகளல்ல.
பிரண்டை திரண்டால் மிடுக்கு
ஆயிரம் கோபுரம் வேண்டின்
நாசமாகி.......
எரிநட்சத்திரத்தின் வீழ்கையில்
மறு நட்சத்திரம் அழுவதில்லை!
நண்பனே,
உரம்கொள்
சதிகொள் பகைவரின்
விடிவில்லாக் கோட்டைக்குள்
நந்தவனத்து ஆண்டியாகாதே!

*(சி.புஸ்பராஜா படைப்புக்களில் இருந்து.....)*

கற்பிதப்படுத்தப்பட்ட அனைத்துப் புனிதங்கள் மீதான விமர்சனங்களை முன்வைப்பதும், இலங்கை தலித் அரசியல் பண்பாட்டுக் கலாசார மேம்பாட்டுக்குமான கருவியாகவும் உலாவும் மின் சஞ்சிகையே.....

## ‘தூ’

புதிய எமது இணையத்தள முகவரி www.thuuuu.net

**இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் (பிரான்ஸ்) சார்பில் வெளிவரும் ஏடு.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்